
# அனைத்துலக முத்தமிழ்
# முருகன் மாநாடு - 2024

## ஆய்வு மலர்



இந்து சமய அறநிலையத்துறை



ISBN : 978-93-6373-669-6
9 789363 786696

இந்து சமய அறநிலையத்துறை
119, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600034.
தொலைபேசி : 044 - 28334811, 12, 13
www.hrce.tn.gov.in

# அனைத்துலக
# முத்தமிழ் முருகன் மாநாடு
# ஆய்வு மலர் – 2024


பதிப்பாசிரியர்

**முனைவர் ஜெ.சசிக்குமார்**



வெளியீடு

**இந்துசமய அறநிலையத்துறை**

சென்னை - 34

## நூல் விவரக்குறிப்புகள்

நூலின் பெயர்

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு
ஆய்வு மலர் - 2024

பதிப்பு

முதல் பதிப்பு 2024

பதிப்பாசிரியர்

முனைவர் ஜெ.சசிக்குமார்

வெளியீடு

இந்துசமய அறநிலையத்துறை பதிப்பகம்
119, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-34.

ISBN

978-93-6373-669-6

வெளியீட்டு எண்

232

பக்கங்கள், நூல் அளவு

616 பக்கங்கள், 1x4 கிரவுன்

தாள்

80 GSM NS Maplitho

அச்சகம்

அரசு ஆர்ட்ஸ்
78, சீனிவாச பெருமாள் சன்னதி,
முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

விலை

ரூ.920/-

---

நூலாசிரியர் கருத்துகளுக்குத் துறை பொறுப்பன்று
© All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted by any means, electronic, mechanical photocopy or otherwise, without the prior permission of the publisher.

# அழகன் கந்தனின் பெயரழகும் அருளழகும்

முனைவர் ம. சித்ரகலா

## முன்னுரை

முருகன் என்ற சொல்லிற்கு அழகன் என்பது பொருள். இந்தியத் துணைக்கண்டத்தில் பண்டுதொட்டு இன்று வரை போற்றி வழங்கும் புகழ்மிகு கடவுளாக முருகக்கடவுள் வடிவெடுத்துள்ளார். முருகனின் பக்தகோடிகள் அவருக்குக் கோடான கோடி பெயர்களைச்சூட்டி, ஆடிபாடி மகிழ்ந்து வழிபாடு செய்கின்றனர். அவ்வகையில் அவரது பெயருக்கான புகழையும், அருள் கொடுக்கும் கருணைக்கடலின் அற்புதங்களை உலகுக்குக்காட்டும் விதமாக "அழகன் கந்தனின் பெயரழகும் அருளழகும்" என்ற தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது.

## முருகன்

முருகு என்றால் அழகு, இளமை என்று பொருள். முருகன் என்றால் அழகன் என்பது பொருள். மேலும் முருகன் என்ற சொல்லுக்கு இளமை "முருகு விம்மிய மொய் குழலேழை" (சீவ.) அழகு, மணம், "முருக மார்புமுரண்கிடக்கை" (பட்டினப். 37), கடவுள்தன்மை.

## வேலன்

வேல் முருகனின் ஆயுதம். ஆகவே முருகன் வேலாயுதன் என்றும் வேலன் என்றும் வெற்றிவேல் என்றும் அழைக்கப்படுகிறான். வேலையுடையான் வெற்றியுடையான் என்பதும், வேலை வணங்குவதே வேலை என்பதும் பழமொழி. சங்க காலப்பாடல்களில் வேல் ஆயுதமே முருகனின் வடிவமாக இருந்தது. வேல் வைத்து ஆடும் ஆடலை வேலனாடல் என்றும் வெறியாடல் என்றும் அழைப்பர்.

## ஆறுமுகன்

சிவபெருமானின் கண்களிலிருந்து வெளிவந்த ஆறு பொறிகள் ஆறுமுகங்களாக மாறியதால் ஆறுமுகன் எனப் பெயர் பெற்றார் என்பதைப் பாடுகிறார்.

## கார்த்திகேயன்

கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்ததால் “கார்த்திகேயன்” என்ற பெயர் முருகனுக்கு வழங்கப்படுகிறது. கிருத்திகை நட்சத்திரங்களின் அதிதேவதைகள் வளர்த்ததால் கிருத்திகன் என்றும் கிருத்திகை நட்சத்திர நாளில் முருகனுக்குச் சிறப்பு பூசைகளும் வழிபடும் பக்தர்கள் கூட்டம் மிகுந்தும் இருப்பதைக் காணலாம்.

## செந்தில்

செந்தில் என்ற பெயரின் பொருள் “சிவப்பு மற்றும் வலிமையானவர், புனித சின்னம், செழிப்பான, இளமை, முருகன், வெற்றி” என்ற பொருளைத் தமிழ்ப்பேராகராதி விளக்கம் தருகிறது. திருச்செந்தூர் “செந்தில்” என்று அழைக்கப்பட்டது.

## கடம்பன்

கடம்பன் என்பது முருகனின் பெயர்களில் ஒன்று. கடம்பன் என்பது ஒரு குடியின் பெயராகவும் உள்ளது. “முருகப் பெருமான், கடம்ப அரசர்களுடன் தமிழ்நாட்டிற்கு வந்த முருகன், இம்முருகப்பெருமான் தண்டை கையில் ஏந்தியவர். கடம்பு மலர்களைத் தோளில் அணிந்தவர்” என்று குறிப்பிடுகின்றது.

## தண்டாயுதபாணி

தண்டு என்ற ஆயுதத்தைக் கையில் கொண்டிருக்கும் முருகன் மாங்கனிக்காகத் தமையன் விநாயகரோடு போட்டியிட்டு தோற்ற கோபத்தில் தண்டாயுதபாணியாக நின்ற திருத்தலம் பழம் நீ.